செய்தி வெளியீடு எண்: 565 நாள் : 06.11.2015

## செய்தி வெளியீடு

## மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் TNPSC Group-II தேர்விற்கு இலவச பயிற்சி

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (தொகுதி –I, தொகுதி–II தொகுதி IV, கிராம நிர்வாக உதவியாளர்), IBPS தேர்வுகள், ஆசிரியர் தகுதி தேர்வு (TET) தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம், மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணையம், இரயில்வே தேர்வு வாரியம் மற்றும் ஆசிரியர் தேர்வு வாரியம் ஆகியவற்றால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் இளைஞர்களுக்கென இலவச பயிற்சி வகுப்புகள் அவ்வப்போது நடைபெற்று வருகின்றன. மேலும், இவ்வட்டங்களில் அனைத்து போட்டித் தேர்வுகளுக்கு தேவையான பொது அறிவு புத்தகங்கள் மற்றும் பாடப்புத்தகங்கள் உள்ளன.

தற்போது TNPSC GROUP-II (A) ல் உள்ள Personal Clerk, Assistant, Planning Junior Assistant, Lower Division Clerk and Junior Co-Operative Auditor ஆகிய பணிகளுக்கான 1947 பணிக்காலியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இத்தேர்விற்கு விண்ணப்பிக்க கடைசி நாள் 11/11/2015 ஆகும். இத்தேர்விற்கு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் இலவச பயிற்சி வகுப்புகள் துவங்க உள்ளன. இப்பயிற்சி வகுப்புகள் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு நடத்தப்பட உள்ளன. இவ்வகுப்பில், முந்தைய தேர்வுகளின் மாதிரி வினாத்தாள்கள் மற்றும் தேர்விற்கான பாடக்குறிப்புகள் வழங்கப்படும். மேலும், வாரம் ஒருமுறை தேர்வு மற்றும் பயிற்சி இறுதியில் மாதிரித் தேர்வுகளும் நடத்தப்பட உள்ளன. இப்பயிற்சியில் சேர விரும்பும் இளைஞர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை நேரில் அணுகி விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சி.சமயமூர்த்தி,
இயக்குநர். வேலைவாய்ப்பு மற்றும்
பயிற்சித்துறை, இயக்ககம், சென்னை–32

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9